IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.25 /2015
Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தினகராஜ் | Caste | : | |
| Father Name | : | கோட்டீஸ்வரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of June, 2026.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. EX A1 கிரைய பத்திரத்தை சாட்சிடம் காண்பித்து அதில் யார் தரப்பினர்கள் என்று கேட்கப்பட்ட போது அவர் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று கூறிகிறார் . என்னுடைய தந்தைக்கு தான் தெரியும் என்று கூறிகிறார். இந்த வழக்கின் நான் தரப்பினராக ஆரம்பத்தில் இருந்தே உள்ளேனா அல்லது என் தந்தை இறந்த பிறகு தரப்பினாராக உள்ளேனா என்றால் என் தந்தை இருக்கும் போது அவர் வழக்கை நடத்தி கொண்டிருந்தார். அவர் இறந்த பிறகு நான் நடத்தி கொண்டிரக்கிறேன். என் பெயர் ஆரம்பத்தில் இருந்ததால் என்றால் எனக்கு தெரியாது. பதிலுரையில் கடைசி பக்கத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதற்கு மேல் உள்ள கையொப்பம் என் தந்தையின் கையொப்பம். 01.07.2015 ல் மேற்கண்ட கையொப்பத்தை நான் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. EX A1 யை இன்று தான் இந்நீதிமன்றத்தில் நான் பார்கிறேனா என்றால் ஆமாம். பாஸ்கர் அதவாது முதல் வாதியுடைய கணவர் வாங்கிய சுய சம்பாத்திய சொத்தில் எனக்கு ஏதேனும் ஆட்சபணை உள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கின் 3ம் வாதியான பாலசுப்ரமணியம் தான் பாஸ்கர் உடைய தகப்பானார் என்று சொன்னால்

சரிதான். பாஸ்கர் சுயமாக வாங்கிய சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் அது எல்லாம் எனக்கு தெரியாது. எந்த சர்வே எண்ணுக்கு நான் ஆட்சபனை தெரிவிக்கிறேன் என்றால் அது எனக்கு ஆட்சபனை இல்லை. ஏனென்றால் சர்வே எண் எனக்கு தெரியாது.

3. அப்படி இருக்கும் போது பதிலுரையில் பத்தியில் நான்கில் 05.10.2006 ஆவண எண் 6021 என்ற ஆவணத்தை சொத்தை முதல் வாதியின் கணவர் பாஸ்கர் வாங்கவில்லை என்று எதன் அடிப்படையில் நான் சொன்னேன் என்றால் சொத்து வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. என் தந்தைக்கு தான் தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு கூட EX A1 ஆன பத்திரத்தை நான் படிக்க வேண்டும் என்று நினைத்ததுமில்லை. படிக்கவுமில்லை. அதனால் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் திரு. பாஸ்கர் சொத்தை 3ம் வாதி மற்றும் அருண்குமார், தனலெட்சுமி மற்றும் லோகேஷ்ராஜ் ஆகியோரிடமிருந்து தக்க பிரதிபலனுக்கு பதிவு பெற்று ஆவண எண் 6021/2006 முன்னிலைக்கு கிரையம் ஏதும் பெறவில்லை மற்றும் மின் இணைப்பு 241 மற்றும் புல எண் 56/1B மின் இணைப்பு உள்ளடக்கியது ஆகிய சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்று எதன் அடிப்படையில் நான் கூறினேன் என்றால் சில விசயங்கள் தெரிந்து அதன் அடிப்படையில் கூறினேன்.

4. EX A1 சொத்தின் சர்வே எண்ணிற்கு நான் வில்லங்கம் கொடுத்து பார்த்தேனா என்றல் இல்லை. என் தந்தையார் சில குறிப்புகள் எழுதி வைத்திருந்தார் அதைப் பார்த்தேன். 3ம் வாதியான பாலசுப்ரமணியம் அவருடைய மகனான பாஸ்கர், 3ம் வாதியுடைய சகோதரர் ரங்கநாதன் ஆகியோர்கள் எங்கெல்லாம் சொத்து வாங்கினார்கள் யாரிடம் வாங்கினார்கள் எப்போது வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு

தெரியாது என்று சொன்னால் சொத்து வாங்கிய விவரம் தெரியும். ஆனால் சர்வே எண் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது. சொத்து மேற்கண்ட விவரம் யாரிடம் வாங்கினார்கள் என்றால் தாவா சொத்தானது பூர்விக சொத்து என்பதால் எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பூர்விக சொத்து என்பதற்கு ஆவணத்தை ஏதேனும் பார்த்தேனா என்றால் என் அப்பா சொன்னார் நான் பார்க்கவில்லை. வா.த.சா.ஆ. 26 ஆனது என்னுடைய சொத்தின் ஆவணம் ஆகும். நான் யாரிடம் சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் கோட்டீஸ்வரன், அருண்குமார் த/பெ ரங்கநாதன், தனலெட்சுமி க/பெ ராஜீ ஆகிய நபர்கள் எனக்கு கிரையம் கொடுத்தார்கள். 05.10.2006 ஆவண எண் 6022 என்ற எண்ணிற்கு கிரையம் கொடுக்கப்பட்டது. நான் வாங்கிய கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் வாங்கிய கிரைய பத்திரத்தை என் தந்தை எங்கு வைத்துள்ளார் என்று எனக்கு தெரியவில்லை.

5. இன்றைய தேதி வரை குறைந்தது நகலை ஆவது வாங்கி தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் நகலை கூட தாக்கல் செய்த நிலையில் வாதி தரப்பில் தாக்கல் செய்த எங்களுடைய கிரைய ஆவணத்தை எப்படி தாக்கல் செய்தார்கள் என்று என்னுடைய வழக்கறிஞரை ஆவது கேட்டேனா என்றால் இல்லை. நான் வாங்கிய கிரைய பத்திரமான EX A 26 ல் பக்கம் 5 ல் நன்செய் சர்வே எண் 478/1A1 ஏக்கர் 0.14 ெஹக்டர் 0.05 தீர்வை 0.75 இந்த நம்பரில் இருக்கும் கிணறு ஒன்றில் பொதுவில் பாதி பாகமும், ஷை கிணற்றில் பொருத்தியுள்ள 5HP பம்செட் ஒன்றிலும் சர்வீஸ் நம்பர் 241 மீட்டர் டெப்சிட்களும், சர்வே எண் 56/1B ஏக்கர் 0.09 ெஹக்டர் 0.03 இந்த நம்பரில் இருக்கும் கிணறு ஒன்றில் பொதுவில் பாதி பாகமும், ஷை கிணற்றில் பொருத்தியுள்ள 5HP

பம்செட் ஒன்றில் சர்வீஸ் எண் 318 உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டது அது தான் தெரியும். ஒரு பாதி எனக்கு என்றால் மற்றொரு பாதி யாருக்கு என்றால் அது கிரையம் கொடுத்தவர்களை தான் கேட்கவேண்டும் எனக்கு தெரியாது. ஒரு பாதி எனக்கு என்றால் மற்றொரு பாதி யாருக்கு என்று என் மீது வழக்கு போட்ட பிறகாவது எனக்கு விற்பனை செய்த நபர்களிடம் போய் கேட்டேனா என்றால் இல்லை.

6. எனக்கு விற்பனை செய்த நபர்களும் அதாவது EX A1ல் உள்ள போட்டோவானது EX A27 மற்றும் EX A28 ஆகிய நபர்கள் போட்டோ தான் EX A26 உள்ள என்னுடைய கிரைய பத்திரத்தில் உள்ள எனக்கு விற்பனை செய்த நபர்களின் போட்டோவும் ஒன்று தான் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் **EX A29 மற்றும் EX A30 ஆக DW1 மூலமாக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் பட்டா எண் 1372 என்ற பட்டாவில் தினகராஜ் என்ற என்னுடைய பெயரும் உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணமானது **EX A31 ஆக DW1 மூலமாக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட அதை ஆவணத்தில் கோட்டீஸ்வரன் பெயரும் மற்றும் மஞ்சுளா , பாலசுப்ரமணியம் ஆகியோர் பெயர்களும் உள்ளது என்றால் சரிதான்.

7. நான் வாங்கிய கிரைய பத்திரம் EX A1 வாதி வாங்கிய EX A26மும் ஒரே தேதியில் தான் கிரையம் பெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு கிரையம் செய்த நபர் தற்போது உயிருடன் உள்ளரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் பார்க்கவில்லை. EX A10ல் உள்ள சர்வீஸ் கனெக்ஸன் 241

யார் பெயரில் உள்ளது என்றால் முத்துமுனியப்ப செட்டியார் பெயரில் உள்ளது. மேற்படி முத்து முனியப்ப செட்டியாருக்கு பிறந்தவர்கள் தான் என் தந்தையார் பாலசுப்ரமணியம் , ரங்கநாதன், கோட்டீஸ்வரன் மற்றும் அவர்களுடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். சர்வீஸ் கனெக்ஸன் முதலில் முத்துமுனியப்பசெட்டியார் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். இறந்த பாஸ்கரோ அல்லது அவரது மனைவியோ என்னுடைய பெயருக்கோ அல்லது என் தந்தையின் பெயருக்கோ அக்கு விடுதலை பத்திரம் ஏதேனும் அவருக்கு சர்வீஸ் கனெக்ஸன் வேண்டாம் என்று எழுதி கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது என் அப்பாவிற்கு தான் தெரியும். EX A1 மற்றும் EX A26 உள்ள அதாவது கிணற்றில் எனக்கு பாதிபாகம் உள்ளது என்று என்னுடைய பதிலுரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

8. நான் ஏன் பதிலுரையில் மேற்கண்ட விவரங்களை சொல்லவில்லை என்பதற்கு காரணம் சொல்லமுடியுமா என்றால் எங்களுடைய அனுபவத்தில் உள்ளது அதனால் சொல்லவில்லை. கிணற்று பகுதி முழுவதுமாக எனக்கு தான் சொந்தமானது என்று பத்திரத்தில் உள்ளதா என்றால் இல்லை. 3ம் வாதி பாலசுப்ரமணியம், 1ம் பிரதிவாதி என்னுடைய தந்தை இருவரும் அவர்களுடைய காலத்தில் இருவரும் பொதுவாக தான் தண்ணீர் பாய்ச்சினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF,
KATPADI.